குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்

முன்னிலை : திருமதி.ப.கனிமொழி.,எல்.எல்.எம்.,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06 ஆம் நாள் சனிக்கிழமை
சுருக்குவிசாரணை வழக்கு எண். 362/2026

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
ஜெயங்கொண்டம் காவல் நிலையம்,
குற்ற எண். 180/2026 ...மனுதாரர்

/எதிராக/

விஜயகுமார்,
த/பெ. பழனிசாமி,
தெற்குதெரு,
சின்னவளையம்,
உடையார்பாளையம் வட்டம்,
அரியலூர் மாவட்டம். ...எதிர்மனுதாரர்/எதிரி

இந்த வழக்கு இன்று 06.06.2026–ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு, என் முன்னால் இன்றையதினமே 06.06.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்ததில், அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் திரு.A.Soundrarajan.,M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரி தனது மீதான குற்றத்தை தம்மிச்சையாக ஒப்புக்கொண்டு ஒரு குற்ற ஏற்பு மனு தாக்கல் செய்துள்ளதால் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

எதிரியின் மீது ஜெயங்கொண்டம் காவல் ஆய்வாளர் சட்டப்பிரிவு 4–A TNP Act ன்படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, எதிரி ஆஜரானதும் எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. குற்றம் பற்றி விளக்கி வினவப்பட்டது. எதிரி தன்னிச்சையாக ஒப்புக்கொண்டு குற்ற ஏற்புரை மனு தாக்கல் செய்தார்.

இறுதியாக, எதிரி குற்றவாளி என்று தீர்மானித்து எதிரியின் மீதான 4–A TNP Act ன்படி குற்றத்திற்கு ரூ.500/– அபராதமும், அபராதம் செலுத்த தவறும்பட்சத்தில் 7 நாட்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது. மொத்த அபராதம் ரூ.500/– (ரூபாய் ஐந்நூறு மட்டும்).

இந்த வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லாததால் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக உரைக்கப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06 நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

ஒம்.திருமதி.ப.கனிமொழி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

இணைப்பு – இல்லை

/உண்மை நகல்/
ஒம்.திருமதி.ப.கனிமொழி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1
ஜெயங்கொண்டம்.